JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 435/2024 |
| | : | Prosecution P.W - 3 |
| NAME | : | மரகதசெல்வம் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 24.03.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது ஏபிநாடானூரில் குடியிருந்து வருகிறேன். நான் பீடி சுற்றும் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என் ஊர்க்காரர்கள். அசா.1 ராமலெட்சுமி என் அம்மா, அசா.2 கணேசன் என் அண்ணன். 18.08.2019 அன்று மதியம் 01.30 மணியளவில் சிவநாடானூர் அருகே தென்புறம் தோட்டத்தில் நான் என் அம்மாவிற்கு காப்பியை தோட்டத்திற்கு கொண்டு சென்றேன். அப்போது எதிரிகள் நான்கு பேரும் என் அம்மாவை அடித்து வரப்பு சண்டைக்காக தேவை இல்லாமல் அவமானமாக பேசினர். உடனே நான் 108 ஆம்புலன்ஸிற்கு போன் செய்தேன். என் அண்ணன் கணேசனுக்கு போன் மூலம் நான் தகவல் சொன்னேன். உடனே 108 ஆம்புலன்ஸ் மூலம் என் அம்மாவை அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். அங்கு நாங்கள் இரண்டு நாட்கள் இருந்தோம். சம்பவம் நடந்து இரண்டு நாட்கள் கழித்து 20ம் தேதி போலிசார் அரசு மருத்துவமனைக்கு வந்தனர். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் பீடி சுற்றுகிறேன். எங்கள் வீட்டிலிருந்து தோட்டத்திற்கு செல்ல அரை மணி நேரம் ஆகும். எதிரிகள் என் அம்மாவை தாக்கியதாகவும், அதை நான் பார்த்ததாகவும் சொல்வது இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட பொய்யான சங்கதி என்றால் சரியல்ல. நான் என் அம்மாவிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 108 ஆம்புலன்ஸ்க்கு நான் தகவல் சொன்னதாகவும், என் அண்ணன் தகவல் சொன்னதாகவும் மாற்றி மாற்றி சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. நான் தான் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொன்னேன். நான் என் அம்மாவை பார்க்க சென்ற நோக்கம் தண்ணீர் கொடுக்க சென்றதாகவும், காப்பி கொடுக்க சென்றதாகவும் மாற்றி மாற்றி சொல்லிஉள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சொல்லக்கூடிய சொத்திற்கும், சாட்சியத்தில் சொல்லக்கூடிய சொத்திற்கும் சம்பந்தம்இல்லை என்றால் சரியல்ல. எங்கள் சொத்தின் தென்புறம் தங்கசாமி இடம் உள்ளது. எங்கள் சொத்தின் வடபுறம் யாருடைய சொத்து என்று தெரியாது. நான் சொல்லும் சொத்திற்கும், வழக்கில் சொல்லி உள்ள சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. எதிரிகள் என் தாயாரை அடித்ததாகவும், திட்டியதாகவும் சொல்லி உள்ளது பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. முன்பு உள்ள வரப்பு பிரச்சினையில் எதிரிகளின் தந்தை நாராயணன் கொலை வழக்கில் என் தந்தை மற்றும் சகோதரர்கள் சேர்க்கப்பட்டதால் பொய்யாக இந்த வழக்கு எதிரிகள் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வேண்டும் என்றே கொலை வழக்கை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கானது பொய் வழக்கு என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 435/2024 |
| | : | Prosecution P.W - 2 |
| NAME | : | கணேசன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 24.03.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது ராஜபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் லேப் டெக்னிசியனாக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எங்களுக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் தோட்டத்தில் வாய்க்கால் வரப்பு தகராறு தண்ணீர் பிரச்சினை நீண்ட காலமாக நடந்து வருகிறது. அசா.1 ராமலெட்சுமி என் அம்மா. சாட்சி மரகதசெல்வம் என் சகோதரி. 18.08.2019 அன்று மதியம் 01.30 மணியளவில் தோட்டத்து வரப்பில் வைத்து என் அம்மா சுயநினைவு இல்லாமல் இருந்தார். என் சகோதரி மரகதசெல்வம் வாய்க்கால் வரப்புகளை அழித்து எதிரிகள் பிரச்சினை செய்ததாகவும், தகராறு செய்ததாகவும், கொலை மிரட்டல் விடுத்ததாகவும் கூறினார். நான் எதேச்சையாக அங்கு சென்றேன். பின்னர் 108 ஆம்புலன்ஸ்க்குபோன் செய்து வரவழைத்து என் அம்மாவை அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். என் அம்மா நடவடிக்கை போலிசாரிடம் சொன்னார். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

18.08.2019 அன்று எதிரிகள் என் அம்மாவை திட்டியதாகவும்,அடித்தாகவும் சொல்லியது சம்பந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு சென்று தெரிந்து கொண்டேன். நான் குடியிருப்பது ராஜபாளையம் சமந்தபுரம் என்றால் சரிதான். சமந்தபுரத்திலிருந்து ஏபிநாடானூருக்கு 102,103 கி.மீ தூரம் இருக்கும். வழக்கு விவரம் எனக்கு தெரியாது என்றாலும் எங்கள் அம்மாவிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 108 ஆம்புலன்ஸ் மூலமாக நான் அழைத்து சென்றதாகவும் என் சகோதரிஅழைத்து சென்றதாகவும் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கை எதிரிகள் மீது பொய்யாக தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாராயணன் என்பவரின் கொலை வழக்கு பற்றி தெரியுமா என்றால் நாராயணன் மாரடைப்பால் இறந்தார். ஆனால் அவர் இறந்ததற்கு நானும் காரணம் என பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கில் என்னையும், என் சகோதரரையும், என் தகப்பனாரையும் சேர்த்துள்ளார்கள். அந்த வழக்கு முடிந்து விட்டது.

தற்போது என் மீது வேறு வழக்கு இல்லை. கொலை செய்யப்பட்ட நாராயணன் மகன்கள் ஆஜர் எதிரிகள் 3 மற்றும் 4 என்பதால் அவர்களை பழி வாங்க வேண்டும் என்பதற்காக பொய்யாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி கொலை வழக்கு சம்பந்தமாக விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 20.08.2019 ல் போலிசார் விசாரித்த பின்பு காவல்நிலையத்தில் சாட்சியம் கையெழுத்து எதுவும் வாங்கினார்களா என்றால் இல்லை. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்லக்கூடிய சொத்திற்கும், எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 435/2024 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | ராமலெட்சுமி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 24.03.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது ஏபிநாடானுரில் குடியிருந்து வருகிறேன். நான் மாடு மேய்க்கும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். நான் எருமை மாடு கொண்டு சென்று கொண்டிருந்த போது ஆஜர் எதிரிகள் வரப்பை வெட்டினார்கள். சாட்சி கணேசன் என் மகன். சாட்சி மரகதசெல்வம் என் மகள். தேதி மாதம் நினைவில் இல்லை. கடந்த 7 வருடங்களுக்கு முன்பு பகல் 2 மணியளவில் நான் தோட்டத்திற்கு சென்ற வயலில் வைத்து கூட்டமாக நிற்கிறார்கள் என்று பார்க்க சென்றேன். அப்போது எதிரிகள் வரப்பை வெட்டி கொண்டிருந்தார்கள். நான் அளந்து பார்த்து வெட்டுங்கள் என்று சொன்னேன். அப்போது எதிரி தங்கசாமி என்னை அவமானமாக தேவுடியா மகளே என பேசினார். பின்னர் என்னை அடித்தார்கள். மதி என்னை அடித்து ஈரக்கொலையை மிதித்து விட்டார். எதிரி அருணாச்சலம் என்னை முள்கம்பை கொண்டு அடித்து விட்டார். அதில் எனக்கு இடது பக்க கையில்இரத்தம் வந்தது. பின்னர் என் மகள் தண்ணீர் கொண்டு அங்கு வந்தாள். என் மகள் சத்தம் போடாதீர்கள். எதற்கு என் அம்மாவைஅடித்தீர்கள் என்று கேட்டாள். பின் நான் கீழே

விழுந்து விட்டேன். பின்னர் என் மகள் 108க்கு போன் செய்தார் என் வீட்டிற்கும் போன் செய்தார். என் மகன்கணேசன் ராஜபாளையத்தில் வேலை பார்க்கிறார் தற்சமயமாக அவர் வந்திருந்தார் என் மகள் அவருக்கு போன் செய்து விட்டாள். பின்னர் நான் எழுந்திருக்க முடியாமல் கிடந்தேன். அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனைக்கு இரண்டு நாட்கள் கழித்து போலிசார் வந்தார்கள். நான் அங்கு வந்த போலிசாரிடம் நடவடிக்கை எடுக்க கூறினேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையது தான். **மேற்படி புகார் வாக்குமூலம் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என் மகன் மீதும், என் கணவர் மீதும் கொலை வழக்கு உள்ளது என்றால் இல்லை. என் சொத்தின் சர்வே எண் தெரியாது. என் சொத்தின் மேல்புறம் பச்சாத்தி சொத்து உள்ளது. என் சொத்தின் கீழ்புறம் பிச்சையா சொத்து உள்ளது. என் சொத்தின் வடபுறம் புறம்போக்கு உள்ளது. 18ம் தேதி சம்பவம் நடந்தது. என்னுடைய சொத்துக்கும், யார் சொத்துக்கும் பிரச்சினை என்றால் தென்பாதியில் உள்ள தங்கசாமி சொத்துக்கும், என் சொத்துக்கும் பிரச்சினை. இந்த வழக்கில் சாட்சி என் மகனும், என் மகள்களும் என்றால் சரிதான். நான் வரப்புக்கு செல்லும் போது 10பேர் கூடியிருந்தார்களா என்றால் 4 பேர் இருந்தார்கள். அக்கம் பக்கத்தில் வேறு ஆள் கிடையாது. எதிரிகளின் பெயர் தெரியும். குற்றவாளி கூண்டில் முதலாவதாக நிற்கும் நபரின் பெயர் என்ன என்று கேட்டதற்கு அருணாச்சலம் என சாட்சி சொன்னார். முதலில் நின்ற நபர் பெயர் அருணாச்சலம். நாராயணன் என்பவரை தெரியும். அவர் வரப்பு பிரச்சினையில் கொலை செய்யப்பட்டாரா என்றால் இல்லை. நாராயணன் எவ்வாறு இறந்தார் என்றால் தெரியாது.

மருத்துவமனையில் புகாரை போலிசார் எழுதினார். நான் கைரேகை மட்டும் வைத்தேன். நான் சொல்லக்கூடிய சொத்துக்கள் தளத்தில் கிடையாது என்றால் சரியல்ல. நான் சொல்லக்கூடிய சம்பவ இடத்திற்கும், வழக்கிற்கும், எதிரிகளுக்கும் சம்பந்தம்இல்லை என்றால் சரியல்ல. என்னை திட்டியதாகவும், அடித்ததாகவும் எதிரிகள் பெயரை மாறி மாறி முன்னுக்குபின் முரணாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் மருத்துவரிடம் 6 பேர் அடித்ததாக சொல்லி உள்ளேன் என்றால் இல்லை, 4 பேர் அடித்தார்கள். 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்ததும், வரவைத்ததும் என் மகன், மகள் என்று முன்னுக்கு பின் முரணாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. நான் சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய எல்கைகள் சொன்ன சொத்திற்கும், வழக்கிற்கும்

சம்பந்தம்இல்லை என்றால் சரியல்ல. என் கணவர் மீதும், என் மகன்கள் மீதும் குற்ற வழக்கு உள்ளது என்றாலும் நான் அதனை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொன்னது போன்று எதிரிகள் என்னை திட்டவில்லை என்றாலும், காயம் எனக்கு ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம்இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi